Registered a sa News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    பங்குனி 15    ( 28 - 03 - 1992 )    சனிக்கிழமை    ஒலை 39

## திட்டமிட்டபடி பரீட்சைகள் வினாத்தாள் வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தடைப்பட்டிருந்த பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறவுள்ளது இவற்றிற்கான வினாத்தாள்கள் நேற்றுமாலை விமானமூலம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன 1991 ஒகஸ்ட் மாத க.பொ.த (உ/த) பரீட்சை 1989 90 91 ஆம் ஆண்டுகளில் தடைப்பட்டிருந்த தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள் ஆகியவற்றிற்கான வினாத்தாள்களே நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன கடந்த வாரம் கொழும்புசென்றிருந்த யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ.சுந்தரலிங்கம் விமானமூலம் இவற்றை எடுத்து வந்துள்ளார் (4 ஆம் பக்கம்)

# பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் புலிகள் யோசனை சமர்ப்பிக்காதது ஏன்?

## வீரச்சாவு

### வீரவேங்கை அகிலன்

வவுனியா மாவட்டம் நொச்சிமோட்டையில் கடந்த 21 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற் [4 ஆம் பக்கம் பார்க்க]

## கத்தோலிக்க உயர்பீட நல்லெண்ண தூதுக் குழுவிடம் புலிகள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம்வகிக்கும் ஆளும்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர் தேசியப் பிரச்சனை சம்பந்தமாக தீர்வுத்திட்டங்களை முன்வைக்க மறுக்கின்றன. இந்த இரு கட்சிகளும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை விரும்பவில்லை. இதனால் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்குள் முரண்பாடு நிலவுகிறது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளிடமிருந்து யோசனைகள் எழுத்தில் எதிர்பார்ப்பது அபத்தமானது"


இவ்வாறு விடுதலைப் புலிகள் நேற்று தம்மை சந்தித்துப் பேசிய கத்தோலிக்க உயர் பீட தூதுக் குழுவிடம் எடுத்து விளக்கினர்.

"பாராளுமன்ற தெரிவுக் குழு யாழ்ப்பாணம் வருகை தந்து தமிழ் மக்களின் நிலைமையை நேரில்கண்டறியமறுக்கிறது. தமிழ் மக்களை சந்தித்து அவர்களது அபிலாசைகளையும் கேட்டறியவும் மறுக்கிறது. தமிழ்மக்களின் பிரதிநிதிகளான புலிகளையும் நேரில் சந்திக்க மறுக்கிறது. தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் அந்நியப்படுத்தி விட்டு தமிழரின்பிரச்சினையை எந்தக் குழுக்களாலும் தீர்க்க முடியாது. இந்த சூழ்நிலையில், விடுதலைப் புலிகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு யோசனைகளை சமர்ப்பிப்பதில் அர்த்தமில்லை" இவ்வாறு புலிகளின் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கினர்

இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும் புலிகளது நிலைப்பாடுபற்றியும் மேலும் விளக்குகையில், "விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானக் கதவுகளை திறந்து வைத்திருக்கிறது போர் நிறுத்தத்திற்கும் பேச்சு வார்த்தைகளுக்கும் நாம் தயார் ஆனால் சிறிலங்கா அரசு சமாதானப் பாதையை உதாசீனம் செய்து விட்டு இராணுவ அணுகுமுறையை தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் அரசுக்கு எவ்வித அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்விதமாக அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் இழுத்தடித்து வருமானால் தமிழீழத் தனியரசு தோன்றும் புறநிலைகள் உருவாகுவதை தவிர்க்க முடியாது." என்றுபுலிகளின் பிரதிநிதிகள் கூறினர்.

நேற்றுக் காலை கத்தோலிக்கத் தூதுக்குழுவிற்கும் விடுதலைப் புலிகளுக்குப் இடையில் யாழ் மாவட்ட அரசியல் செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கத்தோலிக்கத் தூதுக் குழுவில் சிலாபம் மறை மாவட்ட ஆயர் ...

## பேச்சுவார்த்தைக்கு முன் போர் நிறுத்தம் அவசியம்



நேற்று முன்தினம மாலை ஆனைக்கோட்டை சாவக்காட்டு வைரவர் ஆலைய முன்றலில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்களின் ஒரு பகுதியை இங்கே காண்கின்றீர்கள்.

## உடுகம்பொல தலைமறைவு; இரகசியப் பொலிஸ் தேடுதல்

(கொழும்பு)

தென் மாகாண முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் ...

பட்டுள்ளதால் இவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்க முடியாது ...

பாக இவரை விசாரிக்க நீதிமன்றம் விரும்பும் அதே வேளை ...

# போர் நிறுத்தம் அவசியம்

## அரசிடம் ஆயர் பீடம் வற்புறுத்தும்

[யாழ்ப்பாணம்]

முதலில் வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பான ஒரு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த நாம் விரும்புகின்றோம். அதன் பிறகுதான் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் இம்முறை இலங்கை ஆயர் சங்கத்தினூடாக அரசிடம் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான எமது கருத்தை வலியுறுத்தவுள்ளோம் என்று கத்தோலிக்க சமய துறவிகள் குழுவின் பேச்சாளர் வண. அல்பிறட் அலெக்ஸ்சான்டர் நேற்று யாழ் ஆயர் இல்லத்தில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சிங்கள மக்கள் இனப்பிரச்சினையின் தீவிரத்தன்மையை உணராதிருக்கிறார்கள். சிங்கள மக்கள் மத்தியில் இனப்பிரச்சினை குறித்த மதிப்பீடுகளை உருவாக்கச் செயலாற்றவேண்டும் அடுத்த பயணம் நாம் யாழ்ப்பாணம் வரும்போது, அனைத்து மதத் துறவிகளையும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

பெற்ற பேச்சுவார்த்தையில் கத்தோலிக்கத் தூதுக் குழுவில் சிலாபம் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய மார்க்கஸ் பர்னான்டோ, கண்டி மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய பியானி பர்னான்டோ, இலங்கை கத்தோலிக்க துறவிகள் சங்கத் தலைவர் வண அலெக்சான்டர், இலங்கை கத்தோலிக்க பொது நிலைய சங்கத் தலைவர் திரு நியூட்டன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர் சிங்களவர் மத்தியில் விரிசல் அதிகரித்து வருகிறது

## நல்லெண்ண தூதுக்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சிங்களவர் - தமிழர்களுக்கிடையில் தொடர்பில்லாமை மற்றும் மக்கள் நிலைமை குறித்துத் தொடர்புச் சாதனங்கள் மக்கள் விரோதமாக நடந்து கொள்வது ஆகியன இரு இனங்களுக்குமிடையிலுள்ள விரோதத்தை மேலும் இறுக்கமாக்கியுள்ளது. இதனை மனதில் கொண்டு சமாதானத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்கான பணிக்கு எம்மை அர்ப்பணித்து கொழும்பு திரும்பியதும் அதற்கான பணியில் ஈடுபடுவோம்.

இவ்வாறு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த கத்தோ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவு நாள்

# சகல பாடசாலைகளிலும் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயக பிரதேசத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் அன்னைபூபதிநினைவு நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் முதலாம்திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் மாணவர்களின் பேச்சுகள், கவிதைகள், கலையம்சங்கள், ஆசிரியர்களின் சிறப்புரைகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

## அன்னை பூபதி

# நினைவஞ்சலிக்கூட்டமும் உண்ணாவிரதமும்

தியாகச்சுடர். அன்னை பூபதியின் நினைவாக யாழ். கடற்புலிகளால் நடாத்தப்படும் உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று யாழ்ப்பாணம் சென். நிக்கலஸ் தேவாலயத்தில் நடைபெறும்.

காலை 8.00 மணிதொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை அடையாள உண்ணாவிரதமும் பி.ப. 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் சுகுணா, வாஞ்சிநாதன், நாவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# கோமாரி கிராம தமிழ் மக்கள் உணவு உடையின்றி அவதி

அம்பாறை மாவட்டம் கோமாரி கிராமத்தில் இருக்கும் 763 தமிழ் அகதிக் குடும்பங்கள் உடைகள் இன்றி அவதிப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 20 மாதகாலமாக கிடுகையும் மூங்கிலையும் கொண்டு அமைக்கப்பட்ட சிறுகுடிசைகளில் வாழ்க்கையை ஓட்டிவரும் இந்த அகதிகளில் வயது வந்தவர்கள் தங்களுக்கு உடுப்பதற்கு உடுதுணிகள் இல்லாத காரணத்தினால் குடிசைக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறது

போதிய சத்துணவு இல்லாத காரணத்தால் சுமார் 1350 குழந்தைகள் எலும்பும் தோலுமாக காணப்படுகின்றனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று மாதத்தில் சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதப்பட்டியலில் உள்ள ஏ.கே. ரகதுப்பாக்கிகளின் எண்ணிக்கை 259 என்பதே சரியானதாகும். இதன் எண்ணிக்கை 25என எமது நேற்றைய பத்திரிகையில் தவறாக வெளிவந்தமைக்கு வருந்துகிறோம்.

(கொழும்பு)

தென் மாகாண முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம் பொல இரகசிய பொலிசாரால் தேடப்பட்டுவருகிறார். சட்டத்தரணி விஜயதாச லியனாராய்ச்சி பொலிஸ்பாதுகாப்பில் இருந்தபோது இறந்தமை தொடர்பாக இவர் விசாரணைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்ற நீதிமன்ற கட்டளையையடுத்து இவரைத் தேடிச் சென்ற பொலிசார், உடுகம்பொலவின் மாளிகாவத்தை, கம்பகா இல்லங்களில் இவரை காணவில்லை என அறிவித்துள்ளனர்.

முன்னர் இவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்யும்படி நீதிமன்றம் இக்கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இவர் நாட்டைவிட்டு வெளியேறியிருக்க முடியாது என தெரிவிக்கப்படுகிறது

1988 செப்ரெம்பரில் தங்காலை பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி விஜயதாச லியனாராய்ச்சி மர்மமான முறையில் இறந்தது தொடர்பாக இவரை விசாரிக்க நீதிமன்றம் விரும்பும் அதேவேளை அந்தக் காலப்பகுதியில் தென் மாகாணத்தில் நடைபெற்ற பல்வேறு அத்துமீறல்கள் தொடர்பாக இவரிடம் தாம் விசாரிக்க விரும்புவதாக இரகசிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## புலிகள் தலைவர்களை

# விரைவில் பிடிக்க உதவும்படி ரணிலிடம் சவான் கோரிக்கை

(டில்லி)

ராஜிவ்காந்தி கொலை தொடர்பாக பிரபாகரனையும், பொட்டம்மானையும் விரைவில் பிடிக்க உதவும்படி உள்துறை அமைச்சர் எஸ்.பி சவான் சிறிலங்கா தொழில்துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவைக் கேட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதுகுறித்து சிறிலங்காவின் அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவை புதுடில்லியில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள இலங்கை ஆர்வமாக இருப்பதாகவும் அவர் நரசிம்மராவிடம் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ உளவாளிகளினால் வலையிறவில் ஒருவர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டம் வலையிறவில் தமிழர் ஒருவர் சிறிலங்கா உளவாளிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 21 ஆம் திகதி மட்டக்களப்பிற்கு சென்று விறகு விற்றுவிட்டுத் திரும்பும்போது நாவல் குடாவைச் சேர்ந்த சிவராசா யோகராசா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவர்

இவர் உளவாளிகளால் கண்கள் கட்டப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

# தொண்டர் ஆசிரியர் மறியலால் கல்வித்திணை. செயலிழந்தது

[யாழ்ப்பாணம்]

தொண்டர் ஆசிரியர்களின் மறியல் போராட்டத்தினால் யாழ். கல்வித்திணைக்களம் நேற்று செயலிழந்தது.

நேற்றுக்காலை யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டு இம்மறியல் போராட்டத்தை நடாத்தினர்.

காலை 7 30 மணிக்கு கல்வித் திணைக்கள வாயிலை முற்றுகையிட்ட நூற்றுக்கணக்கான ஆண்பெண் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டுமெனக் கேட்டு இம்மறியல் போராட்டத்தை நடாத்தினர்.

இதனால் இங்கு கடமையாற்றும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வீடு திரும்ப வேண்டிய நிலை உருவானது. மறியல்போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை காலை 10 30 மணியளவில் யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் செல்வி தே. மாலா தொண்டர் ஆசிரியர் சார்பாக மகஜர் ஒன்றை பிரதிக்கல்விப்பணிப்பாளர் துரை. தியாகராஜவிடம் கையளித்தார்.

இவர்களால் கையளிக்கப்பட்ட இம்மகஜரில் நாட்டின் ஏனைய பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4. 00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4. 00 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது

OPERATION CROSS BOW

(குறெஸ்போ நடவடிக்கை) (சி/4079(


## தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ் விழா எதிர்வரும் முப்பதாம் திகதி திங்கட்கிழமை காலை 8 . 45 மணிக்குகல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் கவியரங்கம், பேச்சு, இசைக்கச்சேரி, வில்லுப்பாட்டு ஆகியன இடம் பெறுகின்றன.

(ச)


COMMERCIAL BANK

# வர்த்தகவங்கி - யாழ். கிளை

# புத்தாண்டு பரிசுப் போட்டி

வருகின்ற தமிழ் / சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின்
யாழ். கிளையானது
தனது வாடிக்கையாளர்களுக்கும் இப்பிரதேச மக்களுக்குமாக
புத்தாண்டுப் பரிசுத் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றது.
இதன் பிரகாரம் கீழே தரப்பட்ட
கேள்விக் கொத்துக்கு சரியான விடை அளிக்கின்றவர்களில்
50 பேருக்கு அவரவர் அதிஷ்டத்திற்கு உரிய வகையில்
★ பரிசில்கள் காத்திருக்கின்றன ★
இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக் கொத்தை

முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் 31— 03— 1992 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பவும் அல்லது கையளிக்கவும்.

குறிப்பு:- இப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் 31- 03- 1992 அன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும்.

- பரிசு பெறுபவர்கள் விபரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.
இப்போட்டியில் வங்கியினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் தீர்க்கமானதும் ஆகும்.
வங்கி ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவரும் இப்போட்டியில் பங்கு பற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

வர்த்தக வங்கி - யாழ். கிளை


## 31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கடற்புலி கப்டன் தமிழரசன்(சியாப்)

(பரமகுரு உதயகுமார் ஆதிகோவிலடி - வல்வெட்டித்துறை)

| பாரிற் பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 14 04 1973 | 28 02 1992 |

காவியம் பல படைத்திட்ட
வேங்கையே நீ சரிந்ததேன்?
விடுதலை எனும் உணர்விற்கு
உயிர் மூச்சைக் கொடுத்தவனே — சியாப்!
உனது உணர்வுகளும் புதைக்கப்படவில்லை!
எம் இதயங்களில்
அது விதைக்கப்பட்டுள்ளது — அந்த
உணர்வெனும் பயிருக்கு — என்றும்
உரமிட்டே உனை நினைப்போம்!

- குடும்பத்தினர்.

(2340)

## ஓராண்டின் ஓராயிரம் நினைவலைகள்

தாயின் மடியில்
14
—
12



தாண்டிக் குளத்தில்
28
—
03

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
தமிழ்த்தொண்டர் ஈழகேசரி நா. பொன்னையா

## நாற்பத்தோராவது நினைவுதினம்

இடம்.- கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்;- 29 - 03 - 1992 ஞாயிறு காலை 9 . 00 மணி
தலைமை;- கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்
பிரதம அதிதி:- கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்கள்

நினைவுப் பேருரை
'' ஈழகேசரித் தமிழ் ''
கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்
(பேராசிரியர் - தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

நாடகம்
கலைப்பேரரசு, ஏ. ரி. பொன்னுத்துரை வழங்கும்
தாளக்காவடி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. விஸ்வநாதன்,
பிரசார செயலாளர்

( 2332 )


## தேவை

### வெற்றுப் போத்தல்

கீழ்க்காணும் வெற்றுப் போத்தல்கள் வைத்திருப்பவர்கள் வழங்கக்கூடிய தொகை, எதிர்பார்க்கும் விலை என்பவற்றுடன் தொடர்பு கொள்ளலாம்.

1. சீல் சாராயப் போத்தல்
2. மெண்டிஸ் போத்தல்
3. பியர் போத்தல்
4. ஜாம் போத்தல்

பொது முகாமையாளர்
வடமராட்சி தெ ப.பொ
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

(2342)

## பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்ப முடிவுத் திகதி 10.04.92, கல்வி, சம்பள விபரங்கள் அச்சுவேலி. கட்டைவேலி, பருத்தித்துறை தெ ப.பொ.கூ. சங்கங்களிலும், வடமராட்சியில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களிலும் பார்வையிடலாம்.

பதவிகள்:
1. காசாளர்
2. களஞ்சியப் பொறுப்பாளர்
3. காரியாலய சிற்றூழியர்

பொது முகாமையாளர்
வட மராட்சி தெ. ப. பொ.
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

(2342)


## நினைவு கூருகின்றோம்...

### 1992-03-28

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுன்னாகத்தில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

வயதுக்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும்.

✱ பரிசு பெறுபவர்கள் விபரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.
இப்போட்டியில் வங்கியினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் தீர்க்கமானதும் ஆகும்.
வங்கி ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவரும் இப்போட்டியில் பங்கு பற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

## வர்த்தக வங்கி - யாழ். கிளை

# கேள்விக்கொத்து

1. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி எப்போது ஸ்தாபிக்கப் பட்டது?
.............................................................................
2. தற்போதைய வர்த்தக வங்கியின் யாழ். கிளைக் கட்டடம் முன்பு எந்த நிறுவனத்தின் உடைமையாக இருந்தது?
.............................................................................
3. யாழ் வர்த்தக வங்கிக்கிளை இக்கட்டடத்தினைப் பொறுப்பேற்று எப்போது செயற்படத் தொடங்கியது?
.............................................................................
4. வர்த்தக வங்கிக்கு தற்போது இலங்கையில் எத்தனை கிளைகள் உண்டு?
.............................................................................
5. அவை எங்கெங்கு உள்ளன?
.............................................................................
.............................................................................
6. வர்த்தக வங்கியின் தலைமைச் செயலகத்தின் முகவரியைத் தருக.
.............................................................................
7. இவ்வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குனரின் பெயர் என்ன?
.............................................................................
8. வர்த்தக வங்கியினால் மிகவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சேமிப்புத்திட்டங்களின் பெயரினைத் தருக.
.............................................................................
9. யாழ் வர்த்தக வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆகக்குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை எவ்வளவு?
.............................................................................
10. தற்போது இவ் வங்கியினால் சேமிப்புக்கணக்கு வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் யாது?
.............................................................................

அனுப்புபவரின்

முழுப்பெயர்:-.............................................

அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம்:-.............................

முகவரி :-.............................................
.............................................
.............................................

(சி- 4093)

---

| தாயின் மடியில் | | தாண்டிக் குளத்தில் |
|---|---|---|
| 14 | | 28 |
| — | | — |
| 12 | | 03 |
| — | | — |
| 1968 | | 1991 |



## வீரவேங்கை வள்ளல்
### (கனகரத்தினம் குமாரச்சந்திரன்)

காரிருளை நீக்கி ஒரு கனலாய் எழுந்தாய்
ஓரினத்தின் விடிவுக்காய் செருக்களம் புகுந்தாய்
புலியானாய் - நீ பெரும் புயலானாய்
புவி மீதில் அழியாத புகழானாய்!


குமரபுரம்
பரந்தன்.

- குடும்பத்தினர்

( 2326 )

---

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை ராஜன்
### (பொன்னுத்துரை நடேசலிங்கம்)

வீரப்பிறப்பு
28-11-1965

வீரச்சாவு
30.3-1986

ஈழத்தலை நகராம் திருமலை நகரிலே
ஈனவர் கொட்டம் அடக்கப்பிறந்தவனே
இனவெறிப் படைகளைக் கொன்றொழித்து
இன்னல்கள் தீர்க்க உதித்தவனே
ஆண்டதமிழினம் ஆளவென்று நீயும்
ஆவேசம் கொண்டு எழுந்தாயே
அடிமை விலங்கினை உடைத்திடும் போரிலே
அன்னை பூமிமடியில் நீ வீழ்ந்தாயே
ஆண்டுகள் ஆறு சென்றாலும் அகலாது உன்நினைவு

தற்போதைய முகவரி,
பளை.

- குடும்பத்தினர்

(சி-4110)

---

(2342)

கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

---

# நினைவு கூருகின்றோம்...
## 1992-03-28

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுன்னாகத்தில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்ட 8 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, விளாவெட்டுவான் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**விசு** (கெனடி ராஜன் அனிஸ்டஸ் ராஜன் - ஜெயந்தி புரம், மட்டக்களப்பு.)

அம்பாறை, காரைதீவு பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**ரமணி** (அழகையா இந்திரன்-காரைதீவு,-2அம்பாறை.)

கீரிமலையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**கசின்** (கந்தசாமி சிவகுமார் - சுப்பிரமணியம் ஒழுங்கை, வட்டுக்கோட்டை கிழக்கு.)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ஜெகநாதன்** (வேலாயுதன் ஜெகநாதன் - பன்னாலை.)

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். துஷ்யந்தன்** (பொன்னையா தனபாலன் - பூந்தோட்டம், வவுனியா.)

**2-ம் லெப். அலெக்ஸ்** (சோமசுந்தரம் தனபால சுந்தரம் - இராசேந்திரன்குளம், வவுனியா.)

**வள்ளல்** (கனகரத்தினம் குமாரச்சந்திரன் - இரத்தினபுரம், கிளிநொச்சி )

**பெனா** (மகாலிங்கம் முத்துராசா - நொச்சிக்குளம், வவுனியா.)

**சிறி** (சிவலிங்கம் பெருமாள் - மகரம்பைக்குளம், வவுனியா.)

**சுகிர்தன்** (கந்தையா யோகராசா - செட்டிக்குளம், வவுனியா.)

**வரதன்** (தவசி சுப்பிரமணியம் - சின்னக்குளம், வவுனியா.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-4111)

### சிந்தனைக்கு

பண்பட்டு மேம்பட்ட மனிதர்களே, சமத்துவத்தின் உண்மையான உபதேசியர்கள்

- மேத்யூ ஆர்னால்ட் -


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 28-03-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 021-2839 நிர்வாகம் 2308

த. பெ. எண் 07


# அரசின் பிரசாரத்தில் உண்மையில்லை

"விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்த நிலையில்தான் அரசாங்கத்தைப் பேச்சுக்கு அழைத்துள்ளனர் என சிறிலங்கா அரசு பிரசாரம் செய்து வருவது எந்தவித ஆதாரமுமற்றது என்பதை இப்பொழுது நாங்கள் உணர்ந்து கொள்கிறோம்" என தென்னிலங்கையில் இருந்து யாழ். வந்துள்ள கத்தோலிக்க உயர் மட்டத் தூதுக்குழுவினர் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலே குறிப்பிட்ட விவகாரத்தில் மட்டுமல்ல. தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் தொடர்பாக சகல விடயங்களிலும் சிறிலங்கா அரசாங்கம் தனது கட்டுப்பாட்டிலுள்ள வெகுசனத் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தி பொய்யையும் ஏமாற்றுக்களையுமே வெளியிட்டுவருகின்றது. ஒரு பொய்யினைத் தொடர்ந்து தொடர்ந்து வற்புறுத்திக் கூறிவரும் போது அது உண்மை போல் தோன்றுகின்றது. இவ்வாறு உருவாக்கிய ஒரு பொய்மையே இன்று தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பாக தென்னிலங்கையில், பரவியுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம்வரும் நல்லெண்ணத் தூதுக் குழுவினர் சகலரும் இங்கு வந்ததும் தாம் தென்னிலங்கையில் கேள்வியுற்றதற்கும் இங்கு உள்ளதற்கும் இடையில் வெகுவித்தியாசம் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். இதேவேளை, இங்கு வரும் தென்னிலங்கைத் தூதுக் குழுவினர் ஓரளவிற்கு உயர் கல்வித்தரமும், விடயங்களைப் பகுத்தாயும் தன்மையும் முதிர்ச்சியும் கொண்டவர்கள். அவர்களே அரசாங்கத்தின் பிரசார வலையில் சிக்கியுள்ளனர் என்றால் சாதாரண சிங்கள மக்களின் நிலை என்னாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம்; மக்களை ஆயுத முனையில் பலவந்தப்படுத்தி வைத்துள்ளது; புலிகள் தற்பொழுது பலவீனப்பட்டுப் போயுள்ளார்கள்; இதன் காரணமாகவே சமாதானம் பற்றிப் பேசுகின்றார்கள் மேலும், சிறிலங்கா இராணுவம் எப்பொழுது யாழ் குடாநாட்டைக் கைபற்றும், புலிகள் எப்போது விரட்டப்படுவார்கள் என மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்பது போலவும் சிறிலங்கா அரசாங்கம் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறான செய்திகளைக் கேட்டுக் கேட்டு அதுவே உண்மை என எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்

# வவுனியாவில் சிங்கள குடியேற்றம்; இராணுவம், அதிகாரிகள் தீவிரம்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் தெற்கு, தென்மேற்கு பகுதிகளில் தீவிர சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன.

சிறிலங்கா இராணுவம், மற்றும் சிங்கள அரச அதிகாரிகள் இந்தச் சிங்களக் குடியேற்றத்தை முன்னின்று நடத்தி வருகின்றனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, வட மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும், அனுராதபுரம், மதவாச்சி மாவட்டங்களுக்கிடையே உள்ள தமிழ்க் கிராமங்களான சின்னத்தம்பனை, பெரிய நொச்சிக்குளம், நேரிய குளம், மாங்குளம், வாடிவளை புளியங்குளம், சின்னச்சிப்பிகுளம், வேப்பங்குளம், இலுப்பைக் குளம், ஆனைவிழுந்தான், முதலியாகுளம், கரம்பமடு, பெரிய புளியாலங்குளம் மதகுவைத்த குளம், நெடுங்கரச்சேனை ஆகிய இடங்களிலேயே திட்டமிட்ட ரீதியில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றன

இப்பகுதியில் வாழ்ந்து வந்த அனைத்து தமிழ் மக்களுக்கும் 90 ஜூன் மாதத்தின் பின்னர் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்று விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் வீடுகளில் உள்ள பொருள்கள் யாவும் சிங்களக் காடையர்களினால் சூறையாடப்பட்டுவிட்டன.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கையினால் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளச்சென்று குடியமர முடியாத நிலை நீடிக்கின்றது.

(இ)

# இலங்கை வங்கி கணக்கில் பாரதூரமான ஒழுங்கீனம்

(கொழும்பு)

1990 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை வங்கி குறித்த கணக்காளர் நாயகம் டபிள்யூ. காமினி எப்பாவினது அண்மைக்கால அறிக்கை கடன் வழங்கல், நடைமுறைகள் உட்பட மற்றும் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக பாரதூரமான ஒழுங்கீனங்கள் குறைபாடுகள் இருப்பதனை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வாரம் வெளியாகியுள்ள கணக்காளர் நாயகத்தின் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

வங்கியினது முழுக்கடன் தொகையில் கிட்டத்தட்ட 29 பில்லியன் ரூபாய் 4.7 பில்லியன் ரூபா பதினாறு வீதத்தை உள்ளடக்கியது. கடந்தகால மேலதிக நிலுவைகளாக கணக்கிலுள்ளது.

கூட்டு நிதியக் கிளை மூலம் அளிக்கப்பட்ட கடன் வசதிகளில் கடந்தகால, மேலதிக நிலுவைகளாக மூன்று பில்லியன் ரூபா வரையில் உள்ளது.

மேலும் 697,878,524 ரூபா தொகை கடனாக பதினேழு வாடிக்கைகாரர்களுக்கு பலவீனமான பிணையங்கள் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. மீளப் பெறப்படாத நிலையில் பதினொரு கடன்தொகை 229,626,457 ரூபா ஆகும்.

1981 - 87 காலப்பகுதியில் 65 452,842 ரூபா தொகையினை கடனாக பெற்ற எண்மர்களுள் எவரேனும் ஒரு தவணைப் பணத்தையேனும் கூட செலுத்த தவறிவிட்டனர்.

இத்தகையதாக மேலும் பல்வேறு குறைபாடுகள் ஒழுங்கீனங்கள் போன்றவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், கடன்வழங்கல் நடைமுறைகளில் வங்கி ஒழுங்கீனங்களுக்கு இடமளியாத வகையில் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றவேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## பொருளாதார சீர்திருத்தம் தாமதிப்பதால் உதவியும் தாமதமாகலாம்

### — உலக வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு பொருளாதாரச் சீர்திருத்தங்களை மெதுவாகச் செயற்படுத்துவதால் சர்வதேச நாணய நிதியம் சிறிலங்காவுக்கு வழங்கவிருக்கும் ஒரு பகுதிக்கடனைத் தாமதிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது,

75 மில்லியன் டாலர் வரும் ஏப்பிரல் மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் சிறிலங்காவுக்குவழங்கவேண்டியதொகையாகும்.

சிறிலங்கா பொருளாதாரத்தை இது காலவரை பொருளியலாளர் ஆராய்ந்து வருவதால் ஏப்பிரலுக்குப்பிறகு இந்தப் பணம் வழங்கப்படும்என்று வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றைச் சேர்ந்த பொருளியலாளர் தெரிவித்தார்.

அரச தோட்டங்களையும், வங்கிகளையும் அரசு தனியார் மயமாக்குவது மற்றும் அரசு செலவினங்களைக் குறைப்பது குறித்து சர்வதேசநாணய நிதியம் அதிருப்தியடைந்திருப்பதாகவும் மற்றொரு பொருளியலாளர் கருத்து வெளியிட்டார்.

# லலித் மெய்ப்பாதுகாவலர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் தனிப்பட்ட மெய்ப் பாதுகாவலர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் வேறு இருவருக்கும் அங்கீகாரம் இன்றி சுழல் துப்பாக்கி ஒன்றை கொடுத்ததாகச் சொல்லப்படுவது குறித்தே இவர் கடந்த செவ்வாய் அன்று கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு பெண் குழந்தைகளை கழுத்து நெரித்துக் கொன்றதாய்

கனடாவில் குடியேறிய இலங்கையைச்சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் தனது இரண்டு பெண் குழந்தைகளையும் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை ரொன்ரோவிலுள்ள ஸ்காட்டலோ என்ற இடத்தில் கெனடி வீதியிலுள்ள அவர்களது இல்லத்தில் இடம் பெற்ற இச்சம்பவம் கனடாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும்,

குழந்தைகளைக் கொன்ற தாய் கோப்பாயைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# விசர்நாய்க்கடி அதிகரிப்பு; ஆராயக் கருத்தரங்கு

யாழ் மாவட்டத்தில் தொடரும் காலநிலைகளினால் விசர் நாய்கடி அபாயம் அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கலந்துரையாடலில் சுகாதாரப் பகுதி அதிகாரிகள். அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், நகர சபை, பிரதேசசபை ஆகியவற்றின் விசேட ஆணையாளர்கள் யாழ். மாநகர ஆணையாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு மேற்படி இணைச் செயலாளர் கேட்டுள்ளார்.

## புற்பாய் தொழிலகம்

வாதரவத்தை அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பில், புற்பாய் கைத்தொழில் முயற்சியினை மேற்கொள்வதற்கான ஆரம்ப வேலைகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது தற்போது பாய் நெய்வதற்கான சம்புப்புல் களஞ்சியப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## 'சத்தியவான் சாவித்திரி'

வணிக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் வெளியீடான விருட்சம் சஞ்சிகையின் வெளியீட்டிற்கு நிதி சேகரிப்புக்கு உதவும்முகமாக எதிர் வரும் திங்கட்கிழமை(30.3.92) அன்று பிற்பகல் ஐந்து முப்பது மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் யாழ்ப்பாணம் நாட்டார் வழங்கியற் கழகத்தின் 'சத்தியவான் சாவித்திரி' என்ற நாடகம் அரங்கேற்றப்படவுள்ளது.

# இந்தியாவில் சந்தேக நபர்கள் மீது சித்திரவதை மற்றும் கொலை

## அகதிகள் கப்பலை படகுகள் மறித்தனவாம்

(சென்னை)

ராமேஸ்வரத்திலிருந்து அகதிகளை ஏற்றிக்கொண்டு

என்றும்,

இதனைத் தொடர்ந்து உச்சிப் புள்ளியிலுள்ள விமானத்

வர்களுக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கு வந்ததும் இங்கு நடப்பவை பெரும் ஆச்சரியமாக உள்ளது. புலிகளுக்கும் மக்களும் இடையில் உள்ளஉறவு; தமிழ் மக்கள் இலட்சியத்தில் கொண்டுள்ள பற்று; தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்பனவெல்லாம் அதிர்ச்சி தரும் விசயங்களாகவுள்ளன; பயங்கரவாதிகள் என வர்ணிக்கப்படும் போராளிகளின் நல்லெண்ணமும், வழி நடத்தலும், புதிய ஒரு மனித சமுதாயத்தை இப் போராட்ட காலத்தில் அவர்கள் உருவாக்கியுள்ளமையும் அவர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளன.

இதை ஒத்ததே சிறிலங்கா இராணுவத் தரப்பினரும் அரசாங்கமும் இராணுவ வெற்றிகள் குறித்துப் பேசிக் கொள்வதாகும். ஆனால், கடந்த மூன்று மாதமாக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான அதிரடித் தாக்குதல் நடவடிக்கைகள் வடக்கிலும், கிழக்கிலும் எப்பொழுதும் விடுதலைப் புலிகள் தாக்கும் திறன் படைத்தவர்களாக உள்ளனர் என்பதை நிரூபித்துள்ளனர். புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலால் ஏற்பட்டுள்ள பாரிய இழப்புகளைத் தொடர்ந்து இராணுவ யுத்த தந்திரோபாயங்களையும் மாற்றவேண்டிய நிலையும் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பலமான நிலையில் தான், விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயாராக இருப்பதாக அறிவித்தார்களே ஒழிய பலவீனமான நிலையில் புலிகள் அரசாங்கத்தை அழைக்கவில்லை. அத்தோடு ஒரு பலவீனமான நிலை ஏற்படுமானால் இதற்குப் பயந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கென சமாதான பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்குமானால், அதுவும் தவறானதாகும். இது விடுதலைப் புலிகளின் வரலாற்றை உணராதவர்களின் எதிர்பார்ப்புகளாகும்.

கடந்த சில மாதங்களாக புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளவட மாகாணத்திற்கு பல நல்லெண்ணத்தூதுக் குழுக்கள்வந்துபோகின்றன. ஆனால் இப்பிரச்சினை தீர்வில்அவர்களின் பங்களிப்பு எத்தகையதாக இருக்கும் என்றுதிட்டவட்டமாகக் கூறிவிட முடியாது. ஆனால் வந்துசெல்லும் நல்லெண்ணத்தூதுக் குழுக்கள்வடக்கில் உள்ள உண்மை நிலைமையினை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறின் எதிர் காலத்தில் அது ஓரளவு நன்மை பயக்கும் என்று மட்டும் கூறலாம்.

-- சர்வதேச முன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

(லண்டன்)

சந்தேகநபர்களைச் சித்திரவதை செய்வதும், தடுப்புக் காவலில் இருந்த நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டு வருவதுமான நிகழ்ச்சிகளில் இந்தியப் பொலிசார் வழமையாக ஈடுபட்டுள்ளனர். கடந்த புதனன்று சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தடுப்புக் காவலில் இருக்கும் பெண்களை பொலிசார் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதும், வழமையான நிகழ்ச்சியாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இந்தியாவில் தடுத்து வைக்கப்படுபவர்களிடையே சித்திரவதை, பாலியல் வன்முறை, மற்றும் மரணம் சம்பவித்தல் என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கை மேலும் பல விபரங்களை தெரிவித்துள்ளது. அரசாங்கமும், அரசியல் உயர் மட்டத்தினரும் இத்தகைய சித்திரவதைமற்றும் கொலைச் சம்பவங்கள் நடைபெறுவதில்லை என்று மறுத்துவரும் போதிலும்கூட இவைகள் நிறுத்தப்பட்டதாக இல்லை.

ஏழைகளின் உழைப்பைச் சுரண்டுவதும், நன்கு பயிற்றப்பட்ட பொலிசாரை தமது அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதுமான செயல்கள் தொடர்கின்றன. கர்ப்பிணிப்பெண்கள் தொடக்கம் ஆறுவயதுக்குட்பட்ட சிறுவர்கள வரை இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும், பெரும்பாலும் வசதி குறைந்த - சமூகத்தில் மதிப்புக் குறைந்தவர்களாக கருதப்படுகிற மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் -இடம் பெயர்ந்த கூலி உழைப்பாளிகள் மத்தியில் இத்தகைய சம்பவங்கள் அதிகமாக இடம் பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்திரவதை மற்றும் கொலை தொடர்கின்றது. ஏனெனில் இத்தகையவர்கள் கொல்லப்பட்டாலும் கூட சட்டத்தின் கரங்கள் தம்மைத் தாக்குவதற்காக நீள்வது சிரமமானது என்பதைப் பொலிசார் அறிந்துள்ளனர் என சர்வதேச மன்னிப்புச்சபை கருதுகின்றது.

சர்வதேச மன்னிப்புச்சபை அரசியல்வாதிகள், நீதிபதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இவ்வாறு மனித உரிமை மீறப்பட்ட ஐயாயிரம் பேர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் சுட்டிக்காட்டி இவற்றைத் தடுத்து நிறுத்த பத்து அம்ச நிகழ்ச்சித் திட்டமொன்றையும் பரிந்துரை செய்துள்ளது.

பொலிஸ் உயரதிகாரிகள், சந்தேக நபர்களைச் சித்திரவதை செய்வதற்கு பொலிசாருக்கு பச்சை விளக்கு காட்டுவதுடன் முறைப்படி அவற்றை மறைப்பதற்கு சாட்சிகளுக்கு லஞ்சம் வழங்குவது அல்லது மிரட்டுவது போன்ற செயல்களிலும் அடிக்கடி சம்பந்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சித்திரவதைக்கு உட்படுத்துவோர் ஆகக் கூடுதலான பொதுசன அழுத்தம் இருந்தாலன்றி நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுவது மிக அரிதாகும்.

சர்வதேச மன்னிப்புச்சபையினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய நானூறுக்கு அதிகமான சம்பவங்களில் மூன்று சம்பவங்களில் மட்டுமே பொலிசார் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## குற்றஞ்சாட்டப்பட்டோரை

# அரபுலீக்கிடம் ஒப்படைக்க லிபியா பின்னடிப்பு

(லண்டன்)

அமெரிக்க பிரெஞ் விமானங்களை குண்டு வைத்துத் தகர்த்ததில் குற்றஞ்சாட்டப்பட்ட லிபிய நாட்டவர் இருவரையும் அரபு லீக்கிடம் ஒப்படைப்பது என்ற தனது வாக்குறுதியிலிருந்து லிபியா பின்வாங்கிவிட்டது என்று பி.பி.ஸி. அறிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையில்எந்த நாட்டிற்கு விசாரணை அதிகாரம் இருக்கிறது என்பதனை சர்வதேச நீதிமன்றம் தீர்மானித்தாலன்றி குற்றஞ் சாட்டப்பட்ட இருவரையும் தாம் ஒப்படைக்கப் போவதில்லை என்று லிபியாவின் ஜனாதிபதி கேணல் கடாபி அரபுலீக் தூதர்களிடம் தெரிவித்திருந்தார்.

முன்னதாக ஐ. நா. விற்கான லிபியத் தூதுவர் எந்த வித நிபந்தனையும் இன்றி இருவரையும் அரபு லீக்கிடம் ஒப்படைக்கின்றோம் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் இதனை மறுத்த கேணல் கடாபி, அவர் தவறுதலாக தெரிவித்து விட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

தலைமன்னாருக்கு சென்ற கப்பலை இரு மர்மப்படகுகள் வழிமறித்தன என்றும், அவற்றை இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர் துரத்திவிட்டது என்றும் தமிழகத்திலிருந்து வரும் 'தினத்தந்தி' செய்தி வெளியிட்டுள்ளது.

ராமேஸ்வரத்திலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றிக் கொண்டு கடந்த 13 ஆம் திகதி வெளிக்கிட்ட இந்தியக் கப்பல் தலைமன்னாருக்கு புறப்பட்டபோதே இச் சம்பவம் நடைபெற்றது.

இக் கப்பலுக்கு பாதுகாப்பாக இந்திய கடற்படை மற்றும் காவல்படை கப்பல்கள் மூன்று சென்றது என்றும் இந்திய விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்றும் அரை வாசித் தூரம்வரை பாதுகாப்பாக வந்தது என்றும்,

ஹெலிகொப்டர் சென்றதும் அகதிகள் கப்பலை வழிமறித்து தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் இரு மர்மப் படகுகள் வந்துகொண்டிருந்தன

தளத்திற்கு தகவல் அனுப்பப்பட்டு ஹெலிகொப்டர். வந்து படகினை விரட்டியடித்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிகொப்டர் தாழ்வாக பறந்து மர்மப்படகில் இருந்தவர்களை நோக்கி "உடனே திரும்பிச் சென்றுவிடுங்கள் இல்லையென்றால் சுட்டுவிடுவோம்" என்று எச்சரிக்கை செய்தனர் என்றும் இதனைத் தொடர்ந்து இரண்டு மர்மப் படகுகளும் வேறு பக்கம் மறைந்துவிட்டன என்றும் தினத்தந்தி குறிப்பிட்டுள்ளது.

இந்தியக் கப்பலை மிரட்டும் நோக்கத்துடனோ அல்லது அகதிகளை மேலும் இலங்கைக்கு அனுப்பவிடாமல் தடுக்கும் நோக்கத்துடனோ வந்து இருக்கலாம் என்றும்,

ராமநாதபுரம் மாவட்ட கியூ பிராஞ்ச் பொலிஸ் உதவி சுபபிரண்டன் வே. சாமி இது குறித்த விசாரணைகளை செய்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி. மு. கவினர் மீது

# கொலை முயற்சி வழக்கு தாக்கல் செய்ய ஆலோசனை

(சென்னை)

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சட்டசபையில் வைத்து செல்வி ஜெயலலிதாவை தாக்கியவர்கள் மீது தமிழக அரசு விரும்பினால் கொலை முயற்சி குற்றச்சாட்டை சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யலாம் என தமிழக சட்டசபையில் சபா நாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சட்டசபையில் நடந்த சம்பவம் குறித்து நடவடிக்கை புத்தகத்தில் தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக. அவர் மேலும் தெரிவித்தார். அ. தி மு. க. உறுப்பினர்கள் பட்ஜட் உரையை பறித்தார்கள், வன்முறையில் ஈடுபட்டார்கள் என பல தவறான தகவல்கள் அதில் தரப்பட்டுள்ளன.

இதனைத் திருத்தி பழைய அறிக்கையுடன் இணைத்து புதிய சபை நடவடிக்கைப் புத்தகங்கள் விரைவில் வெளியிடப்படும் எனவும் முன்னைய சபை நடவடிக்கைப் புத்தகங்கள் மீளப்பெறப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாதம்

மனித உரிமை மீறல்

# சிறிலங்கா நிலைதிருப்தியில்லை

# அமெரிக்க அதிகாரி தெரிவிப்பு

(வாஷிங்டன்)

சிறிலங்காவின்தற்போதைய மனித உரிமைகள் நிலை குறித்து நாங்கள் திருப்தி அடையவில்லை. ஆனால் கடந்த வருடத்தை விட நிலைமை குறிப்பிடத் தக்க அளவில் மேம்பட்டிருக்கிறது என புஷ்நிர்வாகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் வெளிநாட்டு பத்திரிகையாளர் நிலையத்தின் தெற்காசிய பத்திரிகை நிருபர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில். சென்றவருடம் ஜூனில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆராய்ச்சிக்குழு இலங்கைக்கு விஜயம் செய்து பலதரப்பட்டவர்களையும் சந்தித்திருந்தது.

ஆட்கள் திடீரெனக் காணாமல் போவது தொடர்ந்தும் இடம்பெறுகிறது. மனித உரிமைகளை துஷ்பிரயோகம் செய்துள்ளது குறித்து சில அதிகாரிகள் விசாரணைக்குட்பட்ட போதிலும் தவறாக நடந்துகொள்வது பற்றிய புகார்கள் விசாரணைகளிலும் பார்க்க கூடுதலாக இருக்கின்றன

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் விஷயத்தில் ஒழுங்கு நடைமுறைகளை கையாளுமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளோம் கைது செய்யபட்டுள்ளவர்களைப் "து காப்பாக வைத்திருக்குமாறு அமெரிக்கா இலங்கை அரசாங்க அதிகாரிகளைக் கேட்கிறது இங்ஙனம் செய்வதன் மூலம் திடீரெனக் காணாமல் போவோர் தொகையைக் குறைக்கலாமென நாங்கள் கருதுகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் நவீன இராணுவஉபகரணங்களைகொள்வனவு செய்வதற்கு,இலங்கைக்கு ஒருகோடி அமெரிக்கடாலர்களை கடனாக வழங்க அமெரிக்கா உத்தேசித்துள்ளதென கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கொழும்பிலிருந்து ஸ்ரீப்கோல் என்பவரின் பேர் குறிப்பிடப்பட்டுஅமைைியில் வாஷிங்டன் போஸ்ட்டில் வெளிவந்த கட்டுரையில் புஷ் நிர்வாகம் இலங்கைக்கு இத்தொகையை வழங்கஉத்தேசித்துள்ளதென்று குறிப்பிட்டதில் எவ்வித உண்மையுமில்லை என வெளிவிவகார அமைச்சு மறுப்புக் தெரிவித்துள்ளது

நல்லூர் செஞ்சிலுவைச்சங்க

## உறுப்பினர்பெயர் பட்டியல் யாழ். கிளை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் நிராகரித்துள்ளனர்.

இதுபற்றி மேலும்தெரியவருவதாவது. நடைபெறவிருக்கும் செஞ்சிலுவைச்சங்க கிளைத் தேர்தலில் வாக்களிக்கவென ஒவ்வொரு பிரிவும் 30 பேர்களைக்கொண்டபெயர்ப்பட்டியலை அனுப்பிவைக்க வேண்டும். இவ்வாறு நல்லூர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பிவைத்த பெயர்ப்பட்டியல் யாப்பு விதிகளின் 4, 41, 42 பிரிவிற்கு அமைய காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டு யாழ். கிளையினரால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

திருத்தப்பட்ட பட்டியலை 29 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

[75]

## ஏப்ரலில் 'இ' அட்டைக்கு நான்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோருக்கான ''இ'' அட்டைக்கு ஏப்பிரல் மாதம் நான்கு வாரங்களுக்கு தொடர்ச்சியாக இலவச உலர்உணவு வினியோகிக்கப் படவுள்ளது. இதில் ஒரு வாரத்திற்கு வழங்கப் படவுள்ள உணவு விபரம் வருமாறு. இவை தொடர்ச்சியாக நான்கு வாரங்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன.

| பொருட்கள் | விலை கிலோ | 1 அங். | 2 அங். | 3 அங். | 4 அங். | 5 அங். |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 14 80 | 2கிலோ | 2கிலோ | 4கிலோ | 5கிலோ | 6கிலோ |

பாராளுமன்ற

பர்னான்டோ உட்பட எழுவர் அங்கம் வகித்தனர்.

விடுதலைப் புலிகள் சார்பில் திரு. அன்ரன் பாலசிங்கம் திரு. யோகி. யாழ் மாவட்ட தளபதி திரு. செந்தாளன், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, செல்வி பாரதி 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை ஆசிரியர் திரு. ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொண்டர்

நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் இங்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ்உள்ள பகுதிகளுக்கு மட்டும்தான் நியமனம் எனக் காரணம் காட்டு

## புலமைப் பரிசில் பரீட்சை

1991 ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கு வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் வரும் திங்கட்கிழமை தத்தம் பாடசாலைகளில் சமூகமளிக்கும் படி கேட்கப்படுகிறார்கள்.

மிக விரைவில் இப் பரீட்சை நடைபெறவுள்ளதால் கட்டாயமாக மேற்படி மாணவர்களைச் சமுகமளிக்கும் படி வேலணைக் கோட்டக் கல்வி பிரதிப் பணிப்பாளர் சி புலேந்திரன் கேட்டுள்ளார்.

தமிழர்

விக்க சமயத் துறவிகள் நல்லெண்ணத்தூதுக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

எமது யாழ்ப்பாண குடாநாட்டு விஜயத்தின் போது யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளை எம்மால் அவதானிக்க முடிந்தது சகோதரத்துவமான அக்கறையுடனும், மனித நேயத்தினுடனும் மேற்கொள்ளப் பட்ட இந்த விஜயத்தின்

வேலணைக் கல்விக்கோட்ட

## இருநாள் முத்தமிழ் விழா கோலாகலமாக ஆரம்பம்

வேலணைக் கல்விக்கோட்டத்தின் இருநாள் முத்தமிழ் விழா நேற்று சுண்டிக்குளி சென்யோன்ஸ் அக்கடமி தனிநாயக அடிகள் அரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

காலை 8 - 30 மணியளவில் தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் அவர்கள் ஏற்றி வைத்ததுடன் விழா ஆரம்பமாகியது. தொடர்ந்து மங்கள விளக்கேற்றிவைக்கப்பட்டது. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசை முழங்கிபது தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து, மாவீரர் நினைவஞ்சலி, கல்விக் கோட்டக்கீதம் ஆகியவற்றை வேலணைக் கல்விக் கோட்ட சங்கீத ஆசிரியர்கள் பாடினார்கள்.

ஊர்காவற்றுறை கோத்தணி அதிபர் திரு. ரத்தினராஜா வரவேற்புரை நிகழ்த்தினார் தொடர்ந்து நல்லை ஆதீன குருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆகியோர் ஆசியுரைவழங்கினர். ''வாருங்கள் வரலாற்றை வென்றெடுப்போம்'' என்ற தலைப்பில் கவி அரங்கம், கடல் கடந்த தமிழ்'' என்ற தலைப்பில் சிறப்புரை ஆகியனவும் இடம்பெற்றன.

3-00 மணியளவில் ஆரம்பமாகிய மாலை நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை ரத்தினத்துரை அவர்கள் கலந்து கொண்டார். மாலை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் மங்களவிளக்கேற்றிவைத்தார் புங்குடுதீவுக் கோத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து பொன். சுந்தரலிங்கம் குழுவினரது இசை நிகழ்ச்சி வில்லுப்பாட்டு ஆகியவை நடைபெற்றன

வீரச்சாவு

பட்ட மோதலில் காயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த வீரவேங்கை அகிலன் (சூரியகுமார்) நேற்று வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

விரைவில்

பேச்சுக்களின் முடிவில் இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப் படுவதை விரைவு படுத்தல் என்ற கருத்தை இருவரும் ஒப்புக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

பேச்சு வார்த்தைக்கு

கொண்ட குழுவைக் கொண்டு வரவுள்ளோம். இக் குழுவில் பௌத்தமதத் தலைவர்களும் சாதாரண சிங்கள மக்களும் அதிகமாக இடம்பெறவுள்ளார்கள் என்றார்.

சிறிலங்காவின் முக்கிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதனதன் கருத்தை வலியுறுத்தி இனப் பிரச்சினைக்கான ஆலோசனையை இதுவரை காலமும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் கையளிக்கவில்லை இந்நிலையில் புலிகளும் தமது

## மிதி வெடியில் காலை இழந்தார்

கட்டைக்காட்டுப் பகுதிக்கு வீடு பார்க்கச்சென்ற வாலிபர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்திருக்கிறார்.

நேற்றுக்காலை மேற்படி பகுதியில் உள்ள தமது வீட்டிற்குச் சென்ற வின்சன் (வயது27) என்ற வாலிபர் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடியில் சிக்கிக் கொண்டதில் காலை இழந்திருக்கிறார். இவர் தற்பொழுது சிகிச்சைக்காகயாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ் குடாநாட்டு மக்கள் புலிகள் அமைப்பிற்கு ஆழமான ஆதரவு தெரிவிக்கிறார்கள். யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்களும், ஏனையோரும் அரசின் துன்புறுத்தல்களையும் பொருளாதார நிர்ப்பந்தங்களையும் எம்மிடம் கூறினார்கள் என்றும்,

எமது முதல் யாழ்ப்பாண விஜயத்தின் பிறகு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர், மங்களமுனசிங்கா, ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிறெட்மன் வீரக்கோன், அஸ்கிரிய பீடாதிபதி ஆகியவர்களைச் சந்தித்துத்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
இசைக்கலை/மணி நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினை பயில்வதற்கான

### அனுமதி 91|92

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

தகைமைகள்:

1. பரீட்சார்த்திகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள் வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப் படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. பரீட்சார்த்தி 31.01.92 அன்று 15 வயதிற்கு மேற்பட்டவராகவும் 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தேர்வுகள்) தேர்வுக்கிளை, அவர்களிடமிருந்து நேரில் ரூபா 15 க்கான பற்றுச்சீட்டு (பல்கலைக் கழக) செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23X10 செ. மீ அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 15 க்கான

# ஏப்ரலில் இ அட்டைக்கு நான்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோருக்கான ''இ'' அட்டைக்கு ஏப்பிரல் மாதம் நான்கு வாரங்களுக்கு தொடர்ச்சியாக இலவச உலர்உணவு வினியோகிக்கப் படவுள்ளது. இதில் ஒரு வாரத்திற்கு வழங்கப் படவுள்ள உணவு விபரம் வருமாறு. இவை தொடர்ச்சியாக நான்கு வாரங்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன.

| பொருட்கள் | விலை கிலோ | 1 அங். | 2 அங். | 3 அங். | 4 அங். | 5 அங். |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 14 80 | 2கிலோ | 2கிலோ | 4கிலோ | 5கிலோ | 6கிலோ |
| மா | 13.25 | 2கிலோ | 2கிலோ | 3 1/2கி. | 4 1/2கி. | 5 1/2கி. |
| சீனி | 25.90 | 1/2கி. | 3/4கி. | 3/4கி. | 1 கி. | 1 1/2கி. |
| பயறு | 27.00 | 100கிரா. | 1 கி. | 1 கி. 100கிர. | 1 கி. 200கிர. | 1.6கி. |
| கௌபி | 22.00 | 150கிரா. | 1 கி. | 1 கி | 1 கி. | 1 1/4கி. |
| பால்மா (விற்றாமில்க்) | 12.00 | — | 1 பக் | 1 பக். | 1பக். | 1 பக். |
| சில்லறை பொருட்கள் | — | 55 சதம் | 2.07 சதம் | 30 சதம் | 87 சதம் | 28 சதம் |
| மொத்தபணப் பெறுமதி | — | 75.60 | 138 60 | 189 00 | 226.80 | 283.50 |

இதேவேளை யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் ''இ'' அட்டைக்கான உணவுப் பொருட்களை களஞ்சியத்திலிருந்து பெற்று ஏப்பிரல் முதல் வாரத்திலேயே வினியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ்.செயலக புனர் வாழ்வுப்பிரிவு அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

திரு. யோகி. யாழ் மாவட்ட தளபதி திரு. செந்தாளன், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, செல்வி பாரதி 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை ஆசிரியர் திரு. ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

தொண்டர்

நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் இங்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ்உள்ள பகுதிகளுக்கு மட்டும்தான் நியமனம் எனக் காரணம் காட்டுவது தொண்டர் ஆசிரியர்களாகிய எம்மை உளரீதியாகப் பாதிப்படையச் செய்யும் நோக்கமாகவே கருதவேண்டியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பரீட்சைகள் நடைபெறவில்லையா? வேறு நியமனங்கள் வழங்கப்படவில்லையா? இவை நடைபெறமுடியுமானால் எமது நியமனங்கள் ஏன் வழங்கப்படக் கூடாது?

கல்வித்திணைக்களம் சீராகச் செயல்படும்போது நியமனம் வழங்க கல்விச்சேவை ஆணைக்குழு ஏன் அனுமதி தரக் கூடாது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [சபா]

---

தமிழர்

விக்க சமயத் துறவிகள் நல்லெண்ணத்தூதுக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

எமது யாழ்ப்பாண குடா நாட்டு விஜயத்தின் போது யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளை எம்மால் அவதானிக்க முடிந்தது சகோதரத்துவமான அக்கறையுடனும், மனித நேயத்தினுடனும் மேற்கொள்ளப் பட்ட இந்த விஜயத்தின் போது சாதாரண மக்கள் படும் துன்பங்களைப் பார்க்கவும் உணர்ந்து கொள்ளவும் முடிந்தது. மக்கள் படும் துன்பங்களைத் தவிர்க்கலாம். அல்லது இல்லாமலாக்கலாம் உணவு மற்றும் மருந்துகளின் மேல் விதிக்கப்பட்டுள்ள தடை போஷாக்கின்மையால் பிறக்கும் குழந்தைகள் இறப்பதையும் அவதானிக்க முடிகிறது என்றும்,

போரினால் ஏற்பட்டுள்ள மன உழைச்சல், மின்சார - எரிபொருள் தடை ஆகியன பல நீண்டகாலமாக மக்களை பெரிதும் பாதித்துள்ளது. முக்கியமாகப் பாடசாலை செல்லும் சிறுவர்கள் படிக்கமுடியாத நிலையில் உள்ளார்கள்.

யாழ்ப்பாணம் வந்துசேர எமக்கு இருபத்தி நான்கு மணி நேரம் பிடித்தது என்றால் வடக்கிலுள்ள மக்கள் படும் துன்பத்தை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது என்றும்,

துன்பங்களின் மத்தியிலும் நம்பிக்கையின் அறிகுறிகள் தென்படுகின்றன. வாழ வேண்டும் என்ற நம்பிக்கையும், திட சங்கற்பமும் கௌரவமான சமாதானத்தையும், நீதியையும் ஏற்படுத்தும் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

திட்டமிட்ட

முன்னர் அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைக்கமைய இந்த இரு பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

க. பொ. த. (உ / த) பரீட்சையின் முதல் 10 நாட்களுக்கான வினாத்தாள்களே தற்போது எடுத்து வரப்பட்டன. அடுத்தவார இறுதியில் ஏனைய வினாத்தாள்களும் இங்கு எடுத்துவரப்படும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை திட்டமிட்டபடி பரீட்சைகளை நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளும் பூர்த்தியாகி உள்ளதாக இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (பா)

---

கொண்ட குழுவைக் கொண்டு வரவுள்ளோம். இக் குழுவில் பௌத்தமதத் தலைவர்களும் சாதாரண சிங்கள மக்களும் அதிகமாக இடம்பெறவுள்ளார்கள் என்றார்.

சிறிலங்காவின் முக்கிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதனதன் கருத்தை வலியுறுத்தி இனப் பிரச்சினைக்கான ஆலோசனையை இதுவரை காலமும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் கையளிக்கவில்லை இந்நிலையில் புலிகளும் தமது ஆலோசனையை முன்வைக்க மறுக்கிறார்கள். ஆனால் தெற்கிலிருந்து வரும் பலதரப்பட்ட அமைப்புக்களுடனும், முக்கியஸ்தர்களுடனும் பேசப் புலிகள் விரும்புகிறார்கள், இவ்வாறு புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளை நேற்றுக்காலை சந்தித்தபோது தம்மிடம்அவர்கள் கூறியதாக வண. அலெக்ஸாண்டர் தெரிவித்தார்.

நாம் பலவகையான மக்களையும்சந்தித்துப்பேசினோம். புலிகள் அமைப்பிற்கு ஆழமான ஆதரவு தெரிவிக்கிறார்கள். யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்களும், ஏனையோரும் அரசின் துன்புறுத்தல்களையும் பொருளாதார நிர்ப்பந்தங்களையும் எம்மிடம் கூறினார்கள் என்றும்,

எமது முதல் யாழ்ப்பாண விஜயத்தின் பிறகு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர், மங்களமுனசிங்கா, ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிறெட்மன் வீரக்கோன், அஸ்கிரிய பீடாதிபதி ஆகியவர்களைச் சந்தித்துத் தமிழரின் துன்பங்களையும், புலிகளின் நிலைப்பாட்டினையும் விளக்கினோம்- புலிகள் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும் அல்லது இனப்பிரச்சினையில் தமது நிலைப்பாடு குறித்து ஒரு கடிதத்தையாவது தரவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

இவ்வாறு வண. அல்பிறட் அலெக்ஸான்டர் மேலும்தெரிவித்தார்,

---

திற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தேர்வுகள்) தேர்வுக்கிளை, அவர்களிடமிருந்து நேரில் ரூபா 15 க்கான பற்றுச்சீட்டு (பல்கலைக் கழக) செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23X10 செ. மீ அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 15 க்கான காசுக் கட்டளையை நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம் என பெற்று அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 30. 04. 1992.

பதிவாளர்

[சி, 4113]

---

உ

சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருடம் பங்குனித்திங்கள் 17 ஆம் நாள் [30-03-1992] திங்கட்கிழமை காலை 6-13 மணிமுதல் 7-01 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எங்கள் கனிஷ்ட புத்திரன் | எங்கள் ஏக புத்திரி |
| திருவளர் செல்வன் | திருநிறை செல்வி |
| தேவகுமார் | மைதிலி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: 01. 04. 1992 புதன்கிழமை மாலை 4. 00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி சி. சிவானந்தன்
92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

திருமதி வ. செல்வரட்ணம்
செல்வன் செ. மனோகரன்,
உசன், மிருசுவில்.

(இரு வீட்டார் அழைப்பு)

[2330]

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் அரவிந் - சாந்தகுமார்

திருமலையைச் சேர்ந்த சாந்தகுமார் செந்தாமரை தம்பதிகளின் செல்வப் புதல்வன் அரவிந் தனது முதலாவது பிறந்த நாளை இன்று மானிப்பாயிலுள்ள அவரது அப்பப்பா வீட்டில் வெகு சிறப்பாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், மாமிமார், சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள். (சி-4107)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம்ஆண்டு மார்ச்மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.